மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, அந்த கோவிந்தராஜன் என்பவர் எட்டு செண்ட் நிலத்தை ஊராட்சி மன்றத் தலைவர் என்ற முறையில் இரண்டு ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்து இருக்கிருர். அந்த குத்தகை 29—3—68 டோடு முடிந்து விட்டது. அதன்பிறகு அவர்கள் பேரிலே குத்தகைக்கு எடுக்கப்பட் டிருக்கிறது. 10 செண்ட் நிலம் தன்னுடைய சொந்தப் பெயரில் குத்த கைக்கு எடுக்கப்பட்டு 9—3—68 வரையில் அது இருந்திருக்கிறது. ஆனல் அவர் குத்தகைத் தொகை தரவேண்டியதில்லை. தவறுதலாக அவருடைய பெயரிலே டிமாண்டிலே பாக்கியென்று போட்டிருக்கிருர்கள். கோவிந்த ராஜன் என்பவருடைய தகப்பனரிடமிருந்த குத்தகை 13—11—68 அன்று பாகப் பிரிவினை செய்யப்பட்டு தம்பி பேருக்குப் பாகப் பிரிவினை செய்து ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. 22—3—69 அன்றுதான் அவர் அறங் காவலராக நியமிக்கப்பட்டிருக்கிருர். அன்றைய தேதியில் அவர் பெயரில் எந்தவிதமான குத்தகையும் இல்லையென்று தெரிகிறது. ஆகையினல் அவர் அறங்காவலராக நியமிக்கப்பட்டதில் எந்தவிதமான தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Brothel cases

* 587 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the number of house brothel cases booked by the present Assistant Commissioner of Police, Vigilance, Madras in East Abiramapuram under the suppression of Immoral Traffic Act from the date of his assuming charge of his present post till 27th November 1969?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: 1 (ஒன்று)

THIRU T. MARTIN : Sir, being aware of the existing of high-class brothels in East Abhiramapuram and Raja Annamalai-puram, the Inspector of Vigilance, Thiru Rajaram who was working under the Assistant Commissioner of Vigilance,, conducted some raids or attempted to conduct raids in East Abhiramapuram in August, September and October 1969. May I know from the Hon. Minister whether he has booked any cases during this period or if his attempt has been foiled, may I know the reasons for the same? முற் பக 10-00

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, ஹவுஸ் ப்ராத்தல் கேஸ்களைப் பொருத்தவரை இப்போது இருக்கக் கூடிய அசிஸ்டெண்ட் கமிஷனர் அவர்கள் பதவி ஏற்ற தேதியிலிருந்து 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை 33 கேஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அபிராமபுரத்தில் ஒரு கேஸ் கண்டுபிடிக் கப்பட்டு அது சரியானபடி ப்ரூவ் ஆகவில்லை என்று வித்ட்ரா செய்யப் பட்டிருக்கிறது. 33 கேஸ்களில் 8 கேஸ்கள் கன்விக்ஷன் கொடுக்கப்பட் டிருக்கிறது ; 6 கேஸ்கள் அக்விட்டட் ; 2 கேஸ்கள் வித்ட்ரா செய்யப் பட்டிருக்கின்றன. ஒரு கேஸ் ட்ராப் செய்யப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : என்னுடைய தொகுதியில் இருக்கும் கிழக்கு அபிராமபுரத்தைப் பற்றிச் சாத்தான்குளம் உறுப்பினர் அதிக அக்கறை இந்த விஷயத்தில் காட்டுகின்ற காரணத்தால் அவரைப் பொதுஜன அதிகாரியாக நியமிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

THIRU K. VINAYAKAM : Any hon. Member who has been elected to this House can ask any question pertaining to any part of the State. For instance, I can ask a question about a matter concerning Kalignar's constituency.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வியை அனுமதிக்க வில்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கேள்வி ரெக்கார்டில் போகுமானால் நானும் அதைப் பற்றிக் கேள்வி கேட்க அனு மதியளிப்பீர்களா? Sir, while answering a question, the Hon. Minister has stated that one case was booked and it was withdrawn. May I know the particulars regarding the name of the accused and also the officer who booked the case and also the circumstances which led to the withdrawal of the case ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்டின் அவர்களுக்கு இதிலே தனிப்பட்ட முறையில் புகார்கள் செய்ய வேண்டுமென்றால் சொல்லுவதற்கு ஏராளமான வழிகள் இருக்கின்றன. அந்தப் புகார்களை எழுதித் தருவார்களேயானால் காவல்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக் கிறார்கள், இப்படிப்பட்ட புகார்கள்தான் காவல்துறையினர் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாகும்.

THIRU T. MARTIN : Sir, my question has not been answered. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர்தான் பதில் சொல்லி விட்டாரே.

THIRU T. MARTIN : Sir, my question arose out of the answer given by the Hon. Minister. I am not ventilating a private grievance. The Hon. Minister has stated that he has withdrawn one case and I want to know the particulars of that case. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட அமைச்சருக்குப் பதிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடையளித்துவிட்டார்கள். உங்கள் கேள்விக்கு விடை வர வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. விடை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்களை வற்புறுத்த வும் முடியாது.

* 588 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the number of Hotel brothel cases booked by the present Assistant Commissioner of Police, Vigilance, Madras under the Suppression of Immoral Traffic Act in Madras from the date of his assuming charge of his present post till 27th November 1969.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : 1 (ஒன்று).

THIRU T. MARTIN : Sir, the Hon. Minister has stated that one case which was booked under the Suppression of Immoral Traffic Act has been withdrawn. May I know the reasons for the withdrawal of that case?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இரண்டு கேள்விகளும் அநேகமாக ஒன்றுதான். சாட்சிகள் விசாரிக்கப்பட்டு ப்ரூவ் ஆகாத காரணத்தால் வித்ட்ரா செய்யப்பட்டது என்பதை ஏற்கனவே நான் சொல்லியிருக் கிறேன்.